என்னுடைய அறிவிப்பு இருக்கிறது. எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளலாம். எல்லாவற்றையும் இப்பொழுதுதான் ஆய்வுக்கு அனுப்பியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன் அவர்கள் கேட்டதற்கு நான் அனுமதி தருகிறேன். எல்லோரும் உட்காருங்கள். நான் அறிவிப்பு செய்த பிறகு உங்களுக்கு அனுமதி தருகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அறிவிப்பை நான் படித்த பிறகு நீங்கள் பேசுவதற்கு அனுமதியளிக்கிறேன், உட்காருங்கள்.

3. அறிவிப்புகள்

(அ) முதலமைச்சரைச் சந்திக்க அனுமதி பெற்றுத்தரக் கோரி தே.மு.தி.க. உறுப்பினர்கள் சிலர் பேரவைத் தலைவருக்கு கடிதம் அளித்த பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பிவைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *29-10-2012 அன்று பேரவைக் கூட்டம் முடிவுற்ற பின்னர் நண்பகல் 12.00 மணியளவில் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் திரு. எஸ். செந்தில்குமார், திரு. ஆர். அருள்செல்வன், திரு. து. முருகேசன் மற்றும் திருமதி ஆர். சாந்தி இராஜமாணிக்கம், மற்றும் திரு. வி.சி. சந்திரகுமார் ஆகியோர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை தொகுதிப் பிரச்சினை சம்பந்தமாக சந்திக்க அனுமதி பெற்றுத்தர வேண்டுமென்று ஒரு கடிதத்தை அளித்தனர். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் முதல்வர்தான் என்றும், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் மாண்புமிகு முதல்வர் அவர்களை நேரில் சந்திக்க நேரம் ஒதுக்குவதற்கு கோரிக்கை வைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளரிடம் நேரடியாகக் கடிதம் அளிப்பதுதான் சரியான நடைமுறை என்றும் தெரிவித்தேன். அப்பொழுது அவர்கள் தாங்கள் மாண்புமிகு முதலமைச்சரிடம் தொகுதிப் பிரச்சினை சம்பந்தமாகப் பேசவேண்டியிருப்பதால் அதற்கு பேரவைத் தலைவர் ஆவன செய்யவேண்டுமென்று மீண்டும், மீண்டும் வற்புறுத்தி கடிதத்தினைத் தந்துவிட்டு வெளியிலே சென்று பத்திரிகைகளுக்கும், ஊடகங்களுக்கும், மலிவான விளம்பரம் தேடும் வகையிலே அரசியல் நோக்கத்திற்காகப் பேட்டி அளித்ததாகவே கருதத் தோன்றுகிறது.*

2012 அக்டோபர் 31] [பேரவைத் தலைவர்]

முற்பகல் 11-15

சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு மாநில முதலமைச்சரைச் சந்திக்கவுள்ள அடிப்படை நடைமுறையைக்கூட கடைப்பிடிக்காமல், அதைப்பற்றி நான் பல முறை எடுத்துச் சொல்லியும் கேட்காமல், என்னிடம் ஒரு கடிதத்தைத் தந்துவிட்டு, உள்நோக்கத்துடன் பேட்டி அளித்துள்ளதாகத் தெரிகிறது. எனவே, இப்பிரச்சினையில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறபொழுது அவை உரிமை மீறல் இருப்பதாகத் தெரிவதால், பேரவை விதி 226-ன்கீழ் அதுகுறித்து ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன்.

(ஆ) தே.மு.தி.க. உறுப்பினர்கள் இருவர் பேரவை லாபியில் தன்னைத் தாக்க முற்பட்டதாக உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அளித்துள்ள புகாரை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பிவைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள் 29-10-2012 அன்று பேரவைக் கூட்டத்தில் கலந்துகொண்டு வெளியில் வரும்பொழுது அவரைப் பேரவை லாபியிலே வைத்து தே.மு.தி.க. உறுப்பினர்கள் திரு. ப. பார்த்தசாரதி மற்றும் திரு. க. தினகரன் ஆகியோர் தரக்குறைவாகப் பேசியதாகவும், அவரது சட்டையைப் பிடித்துத் தாக்க முற்பட்டதாகவும், எனவே, தனக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்க நடவடிக்கை எடுப்பதோடு, தனது உரிமையைப் பாதிக்கும் வகையிலே மேற்கூறிய உறுப்பினர்கள் செயல்பட்டதாகவும், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும்படியும் தன்னுடைய கடிதத்திலே திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்கள். இப்பிரச்சினையில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறபொழுது அவை உரிமை மீறல் இருப்பதாகத் தெரிவதால், பேரவை விதி 226-ன்கீழ் அதுகுறித்து ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கின்றேன்.*

திரு. துரைமுருகன், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். பேரவைத் தலைவரின் முடிவிற்குப் பின்னர், அதன்மீது மேற்கொண்டு எதுவும் பேசக்கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவை உரிமைக் குழுவில் உங்கள் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இதன்மீது ஏதாவது சொல்ல கட்சி வேண்டுமென்றால், அங்கு சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) என்னுடைய தீர்ப்பிற்குப் பின்னர் நீங்கள் மேற்கொண்டு பேசுவதற்கு வாய்ப்பு இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. துரைமுருகன், பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.